1973 மார்ச் 17]

திரு. கே. எ. வகாப்: அவர்களுக்கு வீடுகள் கட்ட 2,500 ரூபாய் அளிக்கப் படுகிறது. அதைக்கொண்டு அவர்கள் வீடுகள் கட்ட முடியவில்லை, ஆகவே மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்கிற அளவிலாவது ஏற்றுக்கொண்டு அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கட்ட முடியாதவர்களுக்குத் தள்ளுபடி செய்வதுபற்றித்தான் எழுதியிருக்கிறோம். அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் கட்ட ஆரம்பித்து அதற்குள் முடிக்கவில்லை என்றால் மேற் கொண்டு உதவி செய்வதுபற்றியாவது யோசிக்கலாம். பணத்தை வாங்கிக் கொண்டு வேறுவகையிலேயே செலவிட்டு விடுகிறார்கள். அதனால் பிரச்சினை எழுகிறது.

திருவள்ளுவர் அனாதை விடுதி, வீரவநல்லூர்

*405. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—12—1972 அன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அனாதை விடுதி பற்றிப் புகார் மனு ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: 1—12—1972 நாளிட்ட புகார் மனு வரப்பெறவில்லை. ஆனால் வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அனாதை விடுதி நடைமுறைகளைப்பற்றி 30—11—1972 நாளிட்ட புகார் மனு ஒன்று கல்வி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அதன் நகலை திருநெல்வேலி (தெற்கு) மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கட்கு அனுப்பப்பட்டு அம்மனுவில் செப்பியுள்ள புகார்களை ஆராய்ந்து அவருடைய குறிப்புரையை பணிந்தனுப்பும்படிக் கேட்கப்பட்டுள்ளது. அன்னாரின் குறிப்புரை கல்வி இயக்குநரால் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்த அனாதை ஆசிரமத்திற்காக அரசாங்கத்தினிடம் 32 நபர்களுக்கு மானியம் பெற்று, அங்கு 18 பேர்களைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: புகார்கள் வரப்பட்டிருக்கின்றன. அன்ன புகார் என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற புகார் அதில் அடங்கியுள்ளதா என்பது எனக்குத் தெரி யாது.